பாடசாலை : யா / கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, சுன்னாகம்.

ஸ்தாபிதம் : 1961.02.06

ஸ்தாபகர் : திரு. சி. கிருஷ்ணர்

முகாமை : ஆரம்பத்திலிருந்தே அரசுடைமையாக்கப்பட்டது.

தேர்தற் தொகுதியும் இலக்கமும் : மானிப்பாய் - 082

பிரதேச செயலர் பிரிவு : வலிகாமம் தெற்கு - உடுவில்

கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் : ஏழாலை தென்மேற்கு, J/202

| | | |
|---|---|---|
| பாடசாலையின் | தரம் : | III |
| | நிறம் : | நீலம், வெள்ளை |
| | தன்மை : | கலவன் |
| தற்போதைய அதிபர் : | திரு. திருச்சிற்றம்பலம் நவரத்தினம் | |
| | இ.அ.சே : | 2-II |
| பகுதித்தலைவர் : | திருமதி. இராணிபுஸ்பம் நேசரத்தினம் | |
| | இ.ஆ.சே : | 3-I |
| ஆசிரிய ஆளணி (அதிபர் உட்பட) : | | |
| | ஆண் : | 01 |
| | பெண் : | 02 |
| | மொத்தம் : | 03 |
| ஏனைய நிரந்தர ஊழியர் : | | |
| | ஆண் : | - } இல்லை |
| | பெண் : | - |
| | மொத்தம் : | - |
| மாணவர் தொகை : | | |
| | ஆண் : | 46 |
| | பெண் : | 31 |
| | மொத்தம் : | 77 |
| மாணவர் தொகை : | தரம் 01 – 05 : | 77 |
| | தரம் 06 – 08 : | - |
| | தரம் 09 – 11 : | - |
| | தரம் 12 – 13 : | - |

# யா/உடுவில் ஹோலி றோசறி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை

பாடசாலை : யா / உடுவில் ஹோலி றோசறி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, சுன்னாகம்.

ஸ்தாபிதம் : 1930.03.31

ஸ்தாபகர் : அருட் திரு. பிலிப் அடிகளார்

முகாமை : இலங்கை றோமன் கத்தோலிக்க மிஷன்

தேர்தற் தொகுதியும் இலக்கமும் : மானிப்பாய் - 082

பிரதேச செயலர் பிரிவு : உடுவில்

கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் : உடுவில் வடக்கு, J/186

| | | |
|---|---|---|
| பாடசாலையின் | தரம் : | III |
| | நிறம் : | மஞ்சள் |
| | தன்மை : | கலவன் |
| தற்போதைய அதிபர் : | திரு. சண்முகராசா சண்முகலிங்கம் | |
| | இ.அ.சே : | 2 - I |
| பகுதித்தலைவர் : | திருமதி. செ. இ. விக்கினேஸ்வரி | |
| | இ.ஆ.சே : | 2 -II |
| ஆசிரிய ஆளணி (அதிபர் உட்பட) : | | |
| | ஆண் : | 01 |
| | பெண் : | 01 |
| | மொத்தம் : | 02 |
| ஏனைய நிரந்தர ஊழியர் : | | |
| | ஆண் : | - |
| | பெண் : | - இல்லை |
| | மொத்தம் : | - |
| மாணவர் தொகை : | | |
| | ஆண் : | 01 |
| | பெண் : | - |
| | மொத்தம் : | 01 |
| மாணவர் தொகை : | தரம் 01 – 05 : | 01 |
| | தரம் 06 – 08 : | - |
| | தரம் 09 – 11 : | - |
| | தரம் 12 – 13 : | - |

# யாழ்ப்பாணக் கல்விப் பிராந்திய (வடமாநிலம்) நிர்வாகம் பன்முகப்படுத்தப்பெற்றபின் எமது பிரிவில் அமைந்த கல்வி நிர்வாக அலகுகள் பற்றிய விபரம்:

- **19.05.1989இல் முதன்முதலாக**
  மருதனார்மடம் கல்விக்கோட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
  (மானிப்பாய்+கோப்பாய் தொகுதிகள் இணைந்த நிலையில்)

  **முதலாவது பிரதிக்கல்விப் பணிப்பாளர்**
  திரு. இ. குலசேகரம் அவர்கள் ஆவர்

  **இரண்டாவது பிரதிக்கல்விப்பணிப்பாளர்**
  திரு.ச.தனஞ்செயன் அவர்கள் ஆவர்

  **மூன்றாவது பிரதிக்கல்விப் பணிப்பாளர்**
  திரு. இ. சிவானந்தன் அவர்கள் ஆவர்

  **நான்காவது பிரதிக் கல்விப் பணிப்பாளர்**
  திரு. சு. இரத்தினராசா அவர்கள் ஆவர்

- 01-10-1993 முதல் உடுவிற் கல்விக்கோட்டமாக மாற்றம் பெற்றது.
  (இது வலி.தெற்கு பிரதேச செயலர் பிரிவின் எல்லைகளைக் கொண்ட கல்விக்கோட்டமாக உருவானது)

  **முதலாவது கோட்டக்கல்விப் பணிப்பாளராக**
  திரு.சு.இரத்தினராசா அவர்கள் 01-10-1993 தொடக்கம் 09-04-1997 வரை கடமையாற்றினார்.

  **இரண்டாவது கோட்டக் கல்விப் பணிப்பாளராக**
  திரு.ஆ.வ.கணேசலிங்கம் அவர்கள் 10-04-1997 தொடக்கம் 30-06-1997 வரை கடமையாற்றினார்.

  **மூன்றாவது கோட்டக்கல்விப் பணிப்பாளராக**
  திரு.அ.தற்பரானந்தன் அவர்கள் 01-07-1997 தொடக்கம் இற்றைவரை கடமையாற்றுகின்றார்.

## உடுவிற் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஆலயங்களின் விபரம்

| பிரிவு | ஆலயத்தின் பெயர் | நிர்வாகம் / தனியாள் | பூசகரின் பெயர் |
|---|---|---|---|
| ஜே /182 | 01. புதுமடம் ஞானவைரவர் கோவில் | தனியாள் | சுந்தரம் இராசரத்தினம் |
| | 02. பிள்ளையார் கோவில் | தனியாள் | சுந்தரம் இராசரத்தினம் |
| | 03. சித்திய விநாயகர் கோவில் | நிர்வாகம் | சோ.வேணுகோபாலசர்மா |
| | 04. புதுமடம் வைரவர் கோவில் | தனியாள் | த.தியாகராசா, பத்மநாதன் |
| | 05. ஸ்ரீ முத்துமாரி அம்மாள் கோவில் | தனியாள் | ஆ. நவரட்ணம் |
| ஜே/183 | 06. மொட்டைப் புளியடி வைரவர் கோவில் | நிர்வாகம் | தி. உமாசுதன் |
| | 07. கற்பகப்பிள்ளையார் கோவில் | நிர்வாகம் | உ.அவராஜித குருக்கள் |
| | 08. அம்மன் கோவில் | தனியாள் | பொதுசனம் |
| ஜே/184 | 09. உடுவில் முருகமூர்த்தி கோவில் | நிர்வாகம் | சி. சண்முகரட்ணம் சர்மா |
| | 10. சிவஞானப்பிள்ளையார் கோவில் | தனியாள் | பாலசுப்பிரமணியம் குருக்கள் |
| | 11. ஸ்ரீ இராஜேஸ்வரி அம்மன் கோவில் | நிர்வாகம் | கா.ராஜேஸ்வரசர்மா |
| | 12. புதிய ஞானவைரவர் கோவில் | நிர்வாகம் | சி. சண்முகரட்ண சர்மா |
| | 13. பழைய ஞானவைரவர் கோவில் | நிர்வாகம் | கு. சோமஸ் சர்மா |
| ஜே/185 | 14. ஸ்ரீசொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் கோவில் | தனியாள் | சி. ஜெகநாத சர்மா |
| | 15. ஸ்ரீ பெரியநாயகி விநாயகர் கோவில் | நிர்வாகம் | சிவஸ்ரீ இராஜேஸ்வரக்குருக்கள் |
| | 16. நாகம்மாள் கோவில் | தனியாள் | பாலசுப்பிரமணியக் குருக்கள் |
| | | | குமாரசுவாமிக் குருக்கள் |
| | 17. வீசிட்டி வைரவர் கோவில் | தனியாள் | பொதுசனம் |

| | | | |
|---|---|---|---|
| ஜே /185 | 18. திருச்சிலுலை பிள்ளையார் கோவில் | தனியாள் | பொதுசனம் |
| | தென்னிந்திய திருச்சபை | நிர்வாகம் | |
| | அப்போஸ்தல சபை | நிர்வாகம் | |
| ஜே/ 186 | 19. உடுவில் அம்மன் கோவில் | தனியாள் | இ.முத்துச்சாமி சர்மா |
| | 20. கற்பக்குளை பிள்ளையார் கோவில் | நிர்வாகம் | கோபால கிருஸ்ண சர்மா |
| | 21. காளிகோவில் அம்பலவாணர் வீதி | நிர்வாகம் | தியாகராசாக் குருக்கள் |
| | 22. வைரவர் கோவில் (நாவலடி) | நிர்வாகம் | சி. பரமேஸ்வரசர்மா |
| | 23. ஸ்ரீ ஞானவைரவர் கோவில் | தனியாள் | பொ. சுப்பிரமணிய சர்மா |
| | 24. நாச்சிமார் கோவில் (சோமனாந் தோட்டம்) | தனியாள் | |
| | 25. ஞானவைரவர் (இராமலிங்கம் வீதி) | | |
| ஜே/187 | 26. வெட்டுக்கட்டு பிள்ளையார் கோவில் | நிரிவாகம் | சா.குகானந்தக்குருக்கள் |
| | 27. சிவஞானப்பிள்ளையார் கோவில் | மணியகாரர் (வ.கிருபாகரன்) | வா.பாலசுப்பிரமணியக் குருக்கள் |
| | 28. கரப்பிட்டி பிள்ளையார் கோவில் | மணியகாரர் | கோபாலகிருஷ்ணஐயர் |
| | 29. ஸ்ரீ அம்மன் கோவில் | நிர்வாகம் | நித்தியானந்த சர்மா |
| | 30. சங்குவேலி வடக்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் | நிர்வாகம் | மகேஸ்வரக்குருக்கள் (பாபு) |
| | 31. சிவன் கோவில் | நிர்வாகம் | |
| | 32. கலட்டி வைரவர் கோவில் | மணியகாரர் (கணேசு) | பா.ஜெயக்குமார் |
| | புனித சூசையப்பர் | நிர்வாகம் | போதகர் இயூயின் லோறன் |
| | அன்னை வேளாங்கண்ணி | நிர்வாகம் | போதகர் இயூயின் லோறன் |

| | | | |
|---|---|---|---|
| ஜே /188 | 33. இணுவில் கந்தசாமி கோவில் | நிர்வாகம் | பாஸ்கரன் ஐயர், உருத்திரமூர்த்தி |
| | 34. இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோவில் | தனியாள் (பூசகர்) | வை.சோமசுந்தரக்குருக்கள் |
| | 35. இணுவில் நகுலாத்தி ஞானவைரவர் | தனியாள் | வை.சோமசுந்தரக் குருக்கள் |
| | 36. ஸ்ரீகௌரி அம்பாள் கோவில் | தனியாள் | வை.சோமசுந்தரக் குருக்கள் |
| | 37. ஸ்ரீ நரசிங்க வைரவர் கோவில் | பொதுசனம் | வை.சோமசுந்தரக் குருக்கள் |
| | 38. வேம்படி ஞானவைரவர் கோவில் | பொதுசனம் | |
| | 39. சிவ முத்துமாரி அம்மன் கோவில் | தனியாள் | ஐ. தர்மசீலன் |
| ஜே/189 | 40. இணுவில் சிவகாமி அம்மன் கோவில் | முதலியார் | சா.சோமசுந்தர சர்மா |
| | 41. காசி விஸ்வநாதர் சிவன் கோவில் | முதலியார் | வாசுதேவக் குருக்கள் |
| | 42. இளந்தாரி கோவில் | தனியாள் | ஆறுமுகதாஸ் |
| | 43. அண்ணமார் கோவில் (விஷ்ணு ஆலயம்) | நிர்வாகம் | சி. சிவகரன் |
| | 44. பிள்ளையார் கோவில் | தனியாள் | த. பாலச்சந்திரன் |
| ஜே / 190 | 45 மருதனார்மடம் பல்லப்ப வைரவர் கோவில் | முதலியார் | கோ. குகானந்த சர்மா |
| ஜே/191 | 46. வட்டுவினி அம்மன் கோவில் | தனியாள் | மகாதேவக் குருக்கள் |
| | | முகாமையாளர் (சின்னத்துரை) | குமாரஐயர் |
| | 47. பரமானந்தவல்லி அம்மன் கோவில் | தனியாள் | பரமசாமி ஐயர் |
| | 48. வட்டுவின் வைரவர் கோவில் | தனியாள் | வை. பாஸ்கரக்குருக்கள் |
| | 49. ஆஞ்சனேயர் கோவில் | நிர்வாகம் | சுந்தரேஸ்வரக் குருக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | 50. வட்டுவினி பிள்ளையார் கோவில் | தனியாள் | வை. பாஸ்கரக் குருக்கள் |
| | 51. தெருவடி வைரவர் கோவில் | தனியாள் | வை. பாஸ்கரக் குருக்கள் |
| ஜே/192 | 52. தாவடி பத்திரகாளி கோவில் | தனியாள் நாகேந்திரா | சசிதரன் குருக்கள் |
| | 53. ஸ்ரீகாளி அம்பாள் கோவில் | நிர்வாகம் | இ.யோகேஸ்வரன் |
| | 54. நெல்லுருபாதி பிள்ளையார் கோவில் | நிர்வாகம் | சா. குமரேச ஐயர் |
| | 55. தாவடி ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் (அம்பலவாணர் கந்தசாமி) | நிர்வாகம் | எஸ்.சிவகடாச்சரக்குருக்கள் |
| | 56. சக்கடத்தார் பிள்ளையார் கோவில் | முதலியார் (கணேசலிங்கம்) | ரவீந்திரசர்மா |
| ஜே/193 | 57. அம்பலவாண வேதவிநாயகர் கோவில் | நிர்வாகம் | சிவசங்கரக்குருக்கள் |
| | 58. புளியடி ஞானவைரவர் கோவில் | நிர்வாகம் | விஸ்வதமூர்த்தி |
| | 59. தாவடி வடக்கு காமாட்சி அம்பாள் | நிர்வாகம் | வரதராசா சர்மா |
| | 60. ஐயனார் கோவில் | மணியகாரர் | த. வாசுதேவக்குருக்கள் |
| | 61. மாவடி ஞானவைரவர் கோவில் | முகாமையாளர் | குமரேஸ்ச சர்மா |
| ஜே/194 | கோவில் இல்லை | | |
| ஜே/195 | 62. மயிலனி கந்தசாமி கோவில் | நிர்வாகம் | ச.வரதராஜேஸ்வரக் குருக்கள் |
| | 63. மயிலனி விஸ்வநாதசுவாமி கோவில் | தனியாள் | சோ. சந்திரசேகரசர்மா |
| | 64. ஸ்ரீ சர்வமங்களேஸ்வரி கோவில் இராஜேஸ்வரி | தனியாள் | ச.சண்முகானந்தக் குருக்கள் |
| | 65. வறியப்புலம் மாரியம்மன் கோவில் (வடலியம்மன்) | நிர்வாகம் | ஸ்ரீகாந்தக் குருக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | 66. மயிலனி முத்துமாரி அம்மன் கோவில் | நிர்வாகம் | நா. சிவசங்கரசர்மா |
| | 67. வறியப்புலம் ஞானவைரவர் கோவில் | நிர்வாகம் | |
| | 68. மயிலணி சிவன் கோவில் | தனியாள் | சொ.சந்திரசேகரசர்மா |
| | 69. மயிலணி வடக்கு ஸ்ரீ பத்திரகாளியம்பாள் | நிர்வாகம் | சி. ஜெயநாதசர்மா |
| ஜே/196 | 70. கதிரமலை சிவன் கோவில் | நிர்வாகம் | சர்வேஸ்வரக்குருகள்,<br>ஸ்ரீகாந்தக்குருக்கள் |
| | 71. சிவபூதராயர் கோவில் | நிர்வாகம் | சோதீஸ்வரக் குருக்கள் |
| ஜே/197 | 72. பூதவராயர் கோவில் | தனியாள் | ஆனந்தசர்மா |
| | 73. காளி கோவில் | நிர்வாகம் | |
| | 74. முத்துமாரி அம்மன் கோவில் | பொதுசனம் | ஆனந்தசர்மா |
| | 75. ஞானவைரவர் கோவில் 2 | பொதுசனம் | சர்வேஸ்வரக் குருக்கள் |
| | 76 பேச்சியம்மன் கோவில் | பொதுசனம் | சர்வேஸ்வரக் குருக்கள்<br>ஐ. கந்தசாமி |
| ஜே/198 | 77. தாளையடி ஐயனார் | நிர்வாகம் | ஐ.கந்தசாமி பொ.வாமதேவன் |
| | 78. சந்திரசேகரப்பிள்ளையார் கோவில் | தனியாள் | மா.சபாரத்தின சர்மா |
| | 79. பத்திரகாளி அம்பாள் கோவில் | தனியாள் | மா.சபாரத்தின சர்மா |
| | 80. அம்மன் கோவில் | தனியாள் | கோபாலகிருஷ்ணசர்மா |
| | 81. ஸ்ரீபத்திரகாளி கோவில் | தனியாள் | நா. சபாரத்தின சர்மா |
| | 82. அம்மன் கோவில் | தனியாள் | எஸ். கோபாலகிருஸ்ணசர்மா |
| | 83. பழனி முருகன் | தனியாள் | சோ. பழனிவேல் |
| | 84. காளி கோவில் | தனியாள் | எஸ்.கோபாலகிருஸ்ணசர்மா |

| | | | |
|---|---|---|---|
| ஜே/199 | 85. முத்துமாரி அம்மன் கோவில் | தனியாள் | உரிமையாளர் இராசேந்திரம் |
| | 86. குழாளை அம்மன் கோவில் | தனியாள் | பழனி |
| | 87. பருத்திக்கலட்டி வைரவர் கோவில் | நிர்வாகம் | சி.கந்தசாமி |
| | 88. மூன்று கண் பசு பிள்ளையார் (ஆலடி வீரகத்திப் பிள்ளையார் கோவில்) | நிர்வாகம் | |
| | 89. அம்பளை வைரவர் கோவில் | தனியாள் | |
| ஜே/200 | 90. அருளானந்தப் பிள்ளையார் கோவில் | தனியாள் | இராமலிங்க ஐயர்<br>சோமேஸ்வர சர்மா<br>வாகீஸ்வரக் குருக்கள் |
| | 91. கந்தரோடை மேற்கு ஞானவைரவர் | நிர்வாகம் | வாகீஸ்வரக் குருக்கள் |
| | 92. சின்னக்குளம் ஞானவைரவர் கோவில் (மாரியம்மன் ஆலயம்) | நிர்வாகம் | சண்முகக் குருக்கள் |
| | 93. சிவகாமி அம்மன் கோவில் | தனியாள் | வாகீஸ்வரக் குருக்கள் |
| | 94. நாகதம்பிரான் கோவில் | நிர்வாகம் | |
| | 95. வைரவர் கோவில் | தனியாள் | |
| | 96. வற்றாக்கை விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதசுவாமி கோவில் | தனியாள் | கா.சிவானந்தசர்மா |
| ஜே/201 | 97. மதியா பத்தரவைரவர் கோவில் | தனியாள் (தலைவர் பத்மநாதன்) | மகேஸ்வரக் குருக்கள் |
| | 98. ஞானவைரவர் கோவில் | தனியாள் | மகேந்திரக்குருக்கள் |
| | 99. தம்பு வத்தன வைரவர் கோவில் | நிர்வாகம் | மகேந்திரக்குருக்கள் |
| | 100. கேணியடி அம்மன் கோவில் (கண்ணகை அம்மன்) | நிர்வாகம் | பாலசுப்பிரமணியக்குருக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | 101. தேலி கோவில் | தனியார் | பாலசுப்பிரமணியம் குருக்கள் |
| | 102. அன்ன மகேஸ்வரர் கோவில் | நிர்வாகம் | பொதுசனம் |
| ஜே/202 | 103. கருணாகரப்பிள்ளையார் கோவில் | நிர்வாகம் | நா. குமாரதாஸ் |
| | 104. சாளம்பை முருகமூர்த்தி கோவில் | நிர்வாகம் | தி. தியாகராஜ சர்மா |
| | 105. மயிலணி அன்னமகேச்ர் கோவில் | நிர்வாகம் | வ. வாசுதேவக் குருக்கள் |
| | 106. ஞானவைரவர் கோவில் | நிர்வாகம் | ப. ஜெகநாதசர்மா |
| | 107. திருவருள்மிகு கருணாகரப்பிள்ளையார் மட ஆலயம் | நிர்வாகம் | ஸ்ரீ. கருணாகரன் |
| ஜே/203 | 108. சிவசூறாவத்தை முத்துமாரி கோவில் | நிர்வாகம் | சண்முகானந்த சர்மா |
| | 109. மயிலங்காடு ஞானவைரவர் கோவில் | நிர்வாகம் | ஜெகநந்த சர்மா |
| | 110. மயிலங்காடு பிள்ளையார் கோவில் | தனியாள் | சோமஸ்கந்தஐயர், சபாபதி |
| | 111. மயிலங்காடு நாகபூசனி அம்மன் | நிர்வாகம் | தியாகராஜசர்மா |
| | 112. கருணாகரப் பிள்ளையார் கோவில் | தனியாள் | முருகேசு ஸ்ரீ குமாரவேல் |
| | 113. மயிலங்காடு இராமத்தனசீமா ஞான வைரவர் கோவில் | நிர்வாகம் | சண்முகானந்த சர்மா |
| ஜே/204 | 114. இலந்தைகட்டி பாதாள ஞானவைரவர் | நிர்வாகம் | சோமநாதசர்மா |
| | 115. புளியடி ஞானவைரவர் கோவில் | நிர்வாகம் | குகானந்தசர்மா |
| | 116. வெறீறிளங்கடல் காளி கோவில் | தனியாள் | சோமநாதசர்மா |
| | 117. அண்ணமார் கோவில் | தனியாள் | ஜெகதீஸ்வர சர்மா |
| | 118. ஏழாலை பத்திரகாளி | தனியாள் (இ.தெய்வானை | பொதுசனம் |
| | 119. சிங்கம் வளவு ஞானவைரவர் கோவில் | தனியாள் | சோமநாதசர்மா |

| | | | |
|---|---|---|---|
| ஜே/205 | 120. ஆலயங்காட்டுப் பிள்ளையார் கோவில் | நிர்வாகம் | சி.கந்தசாமி |
| | 121. ஏழாலை கண்ணகை அம்மன் கோவில் | தனியாள் | பொதுசனம் |
| ஜே/206 | 122. முடிமன்னர் ஆலயம் | நிர்வாகம் | சர்வேஸ்வரக்குருக்கள் |
| | 123. நாகதம்பிரான் ஆலயம் | நிர்வாகம் | பாலசுந்தரம் புஸ்பராணி |
| | 124. சிறி வசந்த நாகபூசனி கோவில் | நிர்வாகம் | வசந்தகுமாரி |
| | 125. அத்தியடி பிள்ளையார் கோவில் | தர்மகர்த்தா | சோமநாதசர்மா |
| | 126. அத்தியடி முருகமூர்த்தி கோவில் | தர்மகர்த்தா | சோமநாதசர்மா |
| | 127. பெரியதம்பிரான் கோவில் | தர்மகர்த்தா | சி. பஞ்சலிங்கம் |
| | 128. புவனேஸ்வரி அம்மன் கோவில் | தனியாள் | கா. சோமஸ்கந்த சர்மா |
| | 129. அம்பலவானேஸ்வரர் கோவில் | நிர்வாகம் | பாலசுப்பிரமணியம் |
| | 130. சிவபூதவராயர் கோவில் | நிர்வாகம் | பாலசுப்பிரமணியம் |
| ஜே/207 | 131. சித்திவிநாயகர் ஆயக்கடவைப் | நிர்வாகம் | பாலகிருஷ்ணசர்மா |
| | 132. பிள்ளையார் கோவில் | ---- | ---- |
| | 133. ஞானவைரவர் | மணியகாரர் | செல்வநாதக்குருக்கள் |
| ஜே/208 | 134. இராஜராஜேஸ்வரி அம்மன் கோவில் | தனியாள் | குகானந்தசர்மா |
| | 135. ஐயனார் கோவில் | தனியாள் | ச.குகானந்தசர்மா |
| | 136. மீனாட்சியம்மன் கோவில் | தனியாள் | குகனேஸ்வரசர்மா |
| ஜே/209 | 137. கற்பக விநாயகர் கோவில் | நிர்வாகம் (தற்போது இல்லை) | தி.கெங்காதரக்குருக்கள் |

# தமிழ் மாலையாகிய திருநெறிய தமிழ்

(சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை)
முன்நாள் அதிபர், இணுவில் மத்திய கல்லூரி



பன்னிரு திருமுறைகளிலே ஏழு திருமுறைகள் தேவாரங்கள். தேவாரம் என்ற பெயர் பிற்காலத்திலேயே ஏற்பட்டது. பதின் மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய உமாபதி சிவாச்சாரியார் அருளிய கோயிற் புராணத்தில் தேவாரம் என்ற சொல் காணப்படுகிறது.

திருமுறைப்பாடல்கள் முதலில் "**தமிழ் மாலை**" என்றே அழைக்கப் பெற்றன,

திருநாவுக்கரசர் அருளிய தேவாரத்தில் "பன்னிய நற்றமிழ் மாலை பாடுவித்தென் சிந்தை மயக்கறுத்த திருவருளினானை" என்று தமது பாடல்களைத் "**தமிழ் மாலை**" என்றே குறிப்பிடுகின்றார்.

"நல்லிசை ஞானசம்பந்தனும் நாவுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியுள்ளார்.

பெரியபுராணம், தேவாரம் ஆகியவைகளில் தமிழ்மாலை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

"மூவர் தமிழ்" என்றே திருமுறை வகுத்த ஆசிரியரும் தமிழ் மூதாட்டி ஔவையும் பாடிப் பரவியுள்ளனர்.

"தமிழ்மாலை" என்று குறிப்பிடும் தேவாரப் பாடல்கள் சைவசமயத்திற்கும், தமிழ்மொழிக்கும் இறைவனுக்கும், தமிழ் இனத்திற்கும் சிறப்பினைச் சேர்த்துள்ளன.

சிவம் ஆகிய பரம்பொருளைச் சைவ சமயத்தவர்களாகிய நாம் ஏத்திவழிபடத் தமிழ் மாலைகள் சிறந்தன என்பதை உளங்கொள்ளவேண்டும்.

நம்பியாரூரராகி மணக் கோலத்தில் இருந்த அணுக்கத் தொண்டராகிய சுந்தரரைத் தமக்கு மீளா அடிமை என ஓலை காட்டி ஆட்கொண்ட திருவெண்ணெய் நல்லூர்ப் பெருமான் "அர்ச்சனை பாட்டே ஆகும். மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்றே பணித்ததாகத் தொண்டர் சீர் பரவுவாராகிய சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகின்றார்.

மேலும் தமிழோடிசை கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினீர்.

"தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்னும் திருமுறைப்பாடல்கள் நமது சிந்தனைக்குரியன.

திருமுறை என்பது தெய்வீகத் தன்மையுடையது. பாடுவோரையும் கேட்போரையும் அவர்தம் நெஞ்சக் கல்லை நெகிழ்ந்திருக்கச் செய்யும் நெறியினைத் தரும் நூல்கள்.

சிவபரம் பொருளைத் துய்த்து வாழ்ந்த அருளாளர்களின் திருவாக்குகளாக இன்று நமக்குக் கிடைப்பவை பன்னிரு திருமுறைகள் தொகையாற் பன்னிரண்டெனவும் பாடிய அடியார்களின் எண்ணிக்கையால் இருபத்தேழெனவும் நூல்களின் எண்ணிக்கையால் நாற்பதெனவும், பாக்களின் எண்ணிக்கையால் சற்றேறக்குறைய பதினெண்ணாயிரம் எனவும் கூறுப.

திருமுறைகளைத் "திருநெறிய தமிழ்" என்ற பெயரால் குறிக்க வேண்டும் என்பது திருமுறையாசிரியர்கள் வரிசையில் முதல்வராக நிற்கும் திருஞான சம்பந்தரின் உள்ளக்கிடக்கையாகும்.

"அருநெறியமறை வல்ல முனியகன் பொய்கை அவர்மேய
பெருநெறிய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் தன்னை
ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரை செய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே"

என்பது திருஞான சம்பந்தர் ஞானவாரமுதம் உண்டவுடனே திருவாய் மலர்ந்தருளிய "தோடுடைய செவியன்" எனத் தொடங்கும் முதற்பதிகத்தின் இறுதித் தமிழ் ஆகும்.

திருநெறிய தமிழை முதன்முதலில் வெளிப்படுத்தியருளிய பெருமை காரைக்காலம்மையாரையே சாரும். திருப்பதிகம் என்ற அமைப்பில் பதினொருபாக்களை அமைத்து, அவற்றுள் இறுதிப்பாட்டினைத் திருக்கடைக்காப்பு என்ற அமைப்புடையதாகச் செய்து, அதனுள் இயற்றியவர் பெயர், இயற்றுங் காலத்துத் திருவருள் இயக்கியமுறை, படிப்பவர் பெறும் பயன்

என்பவைகளை இணைத்துத் காட்டித் திருப்பதிக அமைப்பினை அருளிய முதல்வர் காரைக்காலம்மையாரே ஆவர்.

நம்பியாண்டார் நம்பிகள் முதலாம் இராசராசசோழனின் வேண்டுகோளின்படி "*அடங்கன்முறை*" எனப்படும் முதல்ஏழு திருமுறைகளையும் தொகுத்தருளினார் என்பர். அதன் பின்பு ஏனைய திருமுறைகள் ஐந்தும் சேர்க்கப்பட்டு அநபாய சோழன் காலத்தில் பன்னிரண்டு திருமுறைகள் எனப்பூரணம் பெற்றன என்பர் ஆய்வாளர்கள்.

சிவனருளால் சிவஞானம் பெற்ற அருளாளர்கள் பாடியருளிய தனிச்சிறப்புப் பெற்றவை பன்னிரு திருமுறைகள். இவற்றை எழுதுமறை என்பர். வடமொழி வேதங்கள் எழுதாமறை, வடமொழி வேதங்களை ஓதினால் உள்ளமும் ஊனும் இளகாது. திருமுறைகளைப் பொருளுணர்ந்து, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதினால் கருங்கல் மனமும் கனியும், தொடுமணற் கேணிபோல் கண்கள் நீர் சொரியும் மன்பதை உலகினர் யாவரும் அன்பர் ஆவர்.

திருமுறைப்பாடல்கள் மந்திரங்கள், நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழியாகிய மந்திரங்கள். இந்த மந்திரங்களை முறையாக உணர்ந்து நெகிழ்ந்து பாடினால் முந்தை வினை முழுதும் உணர்ந்து நெகிழ்ந்து நீங்கும்.

சிவனைத் தொழுதுலகில் இழுகுமலம் அழியும் வகை கழுவும் உரை கழுமலநகர்ப் - பழுதில் இறை எழுதுமொழி தமிழ் விரகன் வழிமொழிகள் மொழி தகையவே"
என்ற ஞானசம்பந்தப் பெருமான் வழிமொழிகள் உறுதிப்படுத்துவன.

அருளாளர்கள் அனைவரும் சாதி வேற்றுமையைச் சாடியே பாடியுள்ளனர் என்பது மனங்கொளத்தக்கது. அடுத்தவர் துன்பத்தால் துயர் அடையாமல, அவர்களுக்கு உதவிசெய்யாது தன்பெயருக்கும், புகழுக்கும் சமயச் சடங்குகளுக்குப் பணத்தை வாரி வழங்குபவர்கள் உண்மையான பக்தியுணர்வுடையோ-ரல்லர். வாடிய பயிரைக் கண்டதும் வாடி, உயிர்இரக்கம் கொண்டு, பிறப்பால் உயர்வு தாழ்வு கருதாது, எவ்வுயிரையும் தம்முயிராகக் கருதும் யாவருமே சைவ சமய நெறி - திருநெறிய தமிழ் நெறியில் நிற்பவர் ஆவர். சமுதாய ஒருமைப்பாட்டுணர்வுடன் "தமிழ் மாலையாகிய திருநெறிய தமிழைப் போற்றிப் புகழ்ந்து, ஓதியுணர்ந்து, ஒன்றுபட்டு வாழ்தல் சைவநெறிச் செல்வோர் ஒழுகலாறாம்.

# மேலை நாடுகளில் இந்துசமயம்

*செஞ்சொற் செல்வர் நல்லாசிரியர் ஆறு.திருமுருகன்*

ஆதியில் எழுந்த சமயமாகக் கருதப்படும் இந்து மதம் இன்று உலகின் பல பாகங்களிலும் வேரூன்றி வளர்ச்சி பெற்று வருவதை சமய வரலாற்று ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்வர். பாரதத்திலும், ஈழத்திலும் தென்கிழக்காசிய நாடுகளிலும் பரவிய இந்துமதம் இன்று மேலைத்தேய நாடுகளாகிய இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, அவுஸ்ரேலியா, அமெரிக்கா, சுவிஸ், டென்மார்க், நியூசிலாந், நோர்வே, கொலண்ட் போன்ற நாடுகளில் பரவி வருவதைக் காணலாம். இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சனையும், போரின் அனர்த்தங்களும் இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்து மேலைநாடுகளில் குடியேறும் நிலையை ஏற்படுத்தியது. இளைய தலைமுறையைச் சார்ந்த ஈழத்தமிழர்கள் அகதிகளாக மேலைநாடுகளில் தஞ்சமடைந்து வந்தமையும், 1983ல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் பல கல்விசார் வல்லவர்கள் மேலை நாடுகளில் தொழில் வாய்ப்புக் கருதிச் சென்று குடியேறினர். இதே வேளை இந்தியாவில் இருந்து உயர்கல்விக்காகவும், வாணிபத்துக்காகவும் மேலைநாடுகளுக்குச் சென்றவர்களில் ஒருபகுதியினர் நிரந்தரமாக அந்நாடுகளில் குடியேறி வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. மேற்குறித்த மக்கள் தம் சமயம் மொழி கலாச்சார பண்பாட்டு அம்சங்களை பேணுவதில் காட்டிவரும் ஆர்வத்தின் விளைவால் குறிப்பாக மேலைநாடுகளில் இந்து மதம் கடந்த இருபது ஆண்டுகளில் பெருவளர்ச்சி கண்டுள்ளது எனலாம்.

கி.பி. 7ம், 8ம் நூற்றாண்டுகளில் இராஜஇராஜ சோழன் கடல் கடந்த நாடுகளில் தன் ஆதிக்கத்தைச் செலுத்திய போது இந்துமதம் பலநாடுகளில் செல்வாக்குப் பெற்றதை வரலாறுகள் சான்று பகர்கின்றன.

இந்தோனிசியா, பிஜித்தீவுகள், மலேசியா, போன்ற நாடுகளில் குடியேறிய இந்துமக்கள் இந்நாடுகளில் இந்துசமய வளர்ச்சியில் அக்கறைகொண்டனர். தென் ஆபிரிக்காவில் குடியேறிய இந்திய மக்கள் அங்கு இந்து மதத்தை நிலைகொள்ளச் செய்தனர் என்பது இந்து வரலாற்று நூல்கள் விளக்குகின்றன.

## புலம்பெயர் வாழ்மக்களிடையே சமய உணர்வு

தமது பாரம்பரிய சமய வழிபாடுகளையும் பண்பாட்டை பேணவேண்டும் என்ற ஆவல் ஈழத்தில் பிறந்த தற்போது மேலைநாடுகளில் வாழும் பெரும்பாலான மக்களிடையே உணர்வுரீதியாகக் காணப்படுகிறது. இதன் அடிப்படையில் தனிப்பட்ட இல்லங்களிலும் பொது வாடகை மண்டபங்களிலும் ஏற்படுத்திய வாராந்த வழிபாட்டு நிகழ்ச்சிகளே மேலை-நாடுகளில் இன்று இந்துக் கோயில்கள் உருவாக்குவதற்கு வித்திட்டன. மேலும் புலம் பெயர்ந்து வாழும் மக்களின் திருமண வைபவங்கள், சடங்குகள் சம்பிரதாய நிகழ்ச்-சிகளை நடாத்தவும் மக்கள் ஒன்று கூடவும் ஆலயங்கள் பெரிதும் உதவும் என்ற அடிப்படையிலும் அங்கு இந்துக் கோயில்கள் உருவாகின எனலாம். தமது பெற்றோர்களை மேலைநாடுகளுக்கு அழைத்த பிள்ளைகள் அவர்களிடை ஆறுதலை ஏற்படுத்துவதற்கு அதாவது கோயில் உணர்வு-களோடு வாழும் மூத்தோரை ஆற்றுப்படுத்துவதற்கும் கோயில்கள் உருவாக்க முனைந்தனர். இவ்வகையில் உருவாக்கப்பட்ட இந்துக் கோயில்களை மையமாகக் கொண்டு தமது பிள்ளைகளை (மேலைநாடுகளில் பிறந்த பிள்ளைகள்) சமய வழியில் வாழ்விக்க வேண்டும் என்ற ஆவல் பெரும்பாலான பெற்றார்களிடம் காணப்படுகிறது. கோயில்களை மையமாகக் கொண்டு இந்து மன்றங்கள், தமிழ்ப்பாடசாலை வகுப்புகள், இசை நடன வகுப்புக்கள், மூத்தோர் பொழுது போக்கு நிலையங்கள் யோகாசன வகுப்புக்கள் வாணிபநிலையங்கள் (இந்து பண்பாட்டு பிடவைக்கடை, நகைக்கடை, சாப்பாட்டுக்கடை) என பல நிறுவனங்கள் மேலைநாட்டில் இந்துக்களால் உருவாக்-கப்பட்டு வளர்ச்சி பெற்று வருகின்றன.

புலம் பெயர் வாழ் மக்கள் பல நேர்த்திகளை நிறைவு செய்வதற்கும் கோயில்களை உருவாக்கி தம்குல தெய்வங்களை நினைந்து வழிபாடு செய்து வருகின்றனர். பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் சமய உணர்வு மிக்கவர்களாக வளர்க்க வேண்டும் எனப் பல முயற்சிகள் எடுத்து வருகின்ற போதிலும் மேலை நாட்டில் பிறந்த பிள்ளைகள் சிறுபராயத்தில் பெற்றோருடன் கோயி-லுக்கு வருகிறார்கள். குறிப்பாக பதினைந்து வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளை கோயில்களில் காண்பது அரிதாக-

வேயுள்ளது. வீடுகளிலும் சமய ஆர்வமற்றவர்களாக இப்பருவத்தினர் காணப்படுகின்றனர். மேலும் ஆங்கில மொழிமூலமும் புலம்பெயர்ந்து வாழும் நாட்டு மொழிகளிலும் கற்கும் அங்கு பிறந்த பிள்ளைகளுக்கு எமது விழாக்கள் வைபவங்களை விளங்கிக் கொள்ளுகின்ற ஆற்றுலும் குறைவாக இருப்பதனால் அவர்கள் இவற்றை பொதுவாக புறக்கணிப்பது கூடுதலாகவுள்ளது. இன்று புலம் பெயர் நாடுகளில் இந்துக்களால் தோற்றுவிக்கப்பட்ட ஆலயங்கள் பண்பாட்டு நிறுவனங்களை அங்கு வாழும் சந்ததி தொடர்ந்து பேணுமா என்பது பற்றிய ஐயம் அங்கு வாழும் பலரிடமும் இன்று காணப்படுவதனை அவதானிக்கலாம்.

மேலைநாடுகளில் பல்லின பண்பாட்டு மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் குறிப்பாக முஸ்லீம்கள் தமது பண்பாட்டு உடை, மதவழிபாட்டு நம்பிக்கை என்பவற்றை பேணுவதில் பெரிதும் அக்கறை காட்டி வருவதை அவதானிக்கலாம். குறிப்பாக மேலைநாடுகளில் வாழும் இந்திய சீக்கிய மதமக்கள் தமது பண்பாட்டைப் பேணுவதில் வழிபாட்டுக்கு மதிப்புக் கொடுப்பதில் பெரிதும் அக்கறை காட்டி வருகின்றனர். அவர்களின் பிள்ளைகள் சின்னவயது முதல் தாய் மொழி மத அனுட்டானம் தம் பண்பாடு பேணுவதில் இயற்கையாகவே அக்கறையுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இந்துக்கள் தமது பண்பாட்டு உடைகளில் அக்கறை காட்டுவது அருகி வருகிறது. பொதுவாக திருமண வீடுகளில் தம் பண்பாட்டு உடைகளை பெண்கள் அணிவதும் ஆலய வழிபாட்டில் அவற்றைப் பேணுவதையும் காணலாம்.

நிறுவன ரீதியாக இந்தசமயத்தை வளர்ப்பதற்கு தோற்றுவிக்கப்பட்ட அமைப்புகள் இந்தப் பண்பாட்டு வகுப்புகள், போட்டிகளை நடாத்தி மாணவரிடையே ஆர்வத்தை வளர்த்து வருகின்றனர். குறிப்பாக பண்ணிசைப் போட்டி, பேச்சுப் போட்டி எனப் போட்டிகள் நடைபெறுவது வழக்கம். இப்போட்டிகளில் பங்குபற்றும் பெரும்பாலான பிள்ளைகள் விடயங்களை ஆங்கிலத்தில் எழுதி மனனம் செய்து தமிழில் பேசுவார்கள். இந்நிலை தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

**இலண்டனில் இந்து சமயம்**

இலண்டனில் இன்று பதினாறு இந்துக்கோயில்கள் உருவாக்கி மக்கள் வழிபாடு செய்து வருகிறார்கள். இதில் நான்கு ஆலயம் இந்திய மக்களாலும் ஒரு ஆலயம் சிங்களவர் ஒருவராலும் தோற்றம் பெற்றவை. ஏனைய பதினொரு ஆலயங்களும் ஈழத்தமிழர்களால் உருவாக்கப்பட்டவை.

ஈழத் தமிழர்களால் முதல் முதல் உருவாக்கப்பட்ட இந்து ஆலயம்

ஆச்வே - உயர்குன்று வாசல் முருகன் கோயில்
ARCHWAY HIGHGATE HILL MURUGAN TEMPLE

மேற்குறித்த கோயில் எழுபதுகளில் உருவாக்கப்பட்ட கோயிலாகும். கல்வி கற்கச் சென்று அங்கு குடியேறி வாழ்ந்த ஈழத்தவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

**இன்று இலண்டனிலுள்ள ஈழத்தவர்களால் உருவாக்கப்பட்ட கோயில்களில் முதன்மையானவை.**

1. ஆச்வே உயர்வாசல் குன்று முருகன் கோயில்
   (Archway Highgate Hill Murugan Temple)
2. விம்பின்டன் ஸ்ரீ கணபதி கோவில்
   (Wimbledon Sri Ganapathy Temple)
3. ரூட்டில் முத்துமாரி அம்மன் கோவில்
   (London Sivayogam
   Tooting Sri Muththumari Amman Temple)
4. ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் கோவில்
   (Ealing Sri Kanaka Durka Amman Kovil)
5. ஸ்ரோன்லி ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோவில்
   (Stoneleigh Sri Rajarajeswary Amman Temple)
6. இலண்டன் லூசியம் - சிவன் கோவில்
   (London – Lewisham Sivan Kovil)

**இவை தவிர்ந்த புதிதாக கடந்த இரு ஆண்டுகளுக்குள் உருவான கோயில்கள்.**

1. கரோ - முருகன் கோயில்
(Harrow – Murugan Temple)
2. வெம்பிளி - சிவன் கோயில்
(Wembley Sivan Kovil)
3. இலண்டன் ஐயப்பன் கோயில்
(London – Iyappan Temple)
4. குறைடன் பிள்ளையார் கோயில்
(Curaidan Pillayar Temple)
5. வோல்த்தமேஸ்ரோ முருகன் கோயில்
(Walthamston Murugan Temple

மேற்குறித்த ஆலயங்களை விட மிகவும் நீண்ட வரலாறு கொண்ட இந்தியத் தமிழர்களால் உருவாக்கப்பட்டு இன்று கூடுதலாக இலங்கை மக்களால் வழிபாடு செய்யப்படும் ஆலயமாக இலண்டன் ஈஸ்ற்காம், ஸ்ரீ முருகன் கோயில் விளங்குகிறது. (London Eastham Murugan Temple) இந்தியத் தமிழர்களால் தோற்றுவிக்கப்பட்ட லண்டன் லக்சுமி நாராயணன் கோயிலும் பிரசித்தமான ஆல்யமாகவுள்ளது. இலண்டன் இந்து சமய நிறுவனங்களில் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் 2002 ஆவணி மாதம் 25 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு வெள்ளிவிழாக் கொண்டாடியது. இச்சங்கம் பல சைவசமயத் தொண்டுகளை செயற்படுத்தி வருகிறது. குறிப்பாக சமய விழாக்கள் சமய அறிவுப் போட்டிகள், முதியோர் நிலயங்கள் எனச் இச்சபை நிறைந்த பணியாற்றிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## இலண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை

இந்து சமயவிருத்திக்கும், சைவத்தமிழ் பண்பாட்டை வளர்பதிலும் ஆதரவற்ற தாயகச் சிறார்களுக்கு உதவு-வதிலும் இவ்நிறுவனம் மிகுந்த அக்கறைகொண்டு செயற்பட்டு வருகிறது. பதியிலர் கதியிலர் உதவி நிதியம் போன்ற பல்வேறு திட்டங்கள் சிவயோகம் செயற்படுத்தி வருகிறது. யாழ் போதனா வைத்தியசாலையில் நவீன கண்சத்திர-

சிகிச்சைக் கூடத்தை நிறுவியதுடன், கந்தரோடை கிராமத்தில் விதவைப் பெண்களுக்கு இல்லங்களை அமைத்து சிவயோகம் அன்னையர் குடியிருப்பை உருவாக்கியமையும் குறிப்பிடத்தக்கது.

## இலண்டன் திருக்கோவில் ஒன்றியம்

வருடா வருடம் அனைத்துலக சைவமாநாடு நடாத்தி சைவத்தமிழ் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

இலண்டனில் கடந்த 10 ஆண்டுகளாக இந்து சமய வைபவங்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. குறிப்பாக ஆலயங்களில் தேர்த்திருவிழா நடைபெறும் போது பாரிய பிரதான வீதிகள் தடைசெய்யப்பட்டு பிரித்தானிய பொலிஸ் உதவியோடு தேர்வீதி வலம் வரும். சுமார் 50 ஆயிரம் தமிழர் இவ்வேளையில் ஒன்றுகூடுவர். நீஸ்டனில் என்ற இடத்தில் பளிங்குக் கற்களால் பிரமாண்டமான இந்துக் கோயில் இந்தியர்களால் கட்டப்பட்டு தினமும் 2000 மக்கள் வழிபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## கனடாவில் இந்துமதம்

1983இல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து கனடாவால் இலங்கைத் தமிழருக்கு அகதி அந்தஸ்து வழங்கியதைத் தொடர்ந்து சுமார் மூன்று இலட்சம் ஈழத் தமிழர் அங்கு நிரந்தரமாக இன்று வாழ்கின்றனர். கனடா அரசு தாய்மொழியை ஒருபாடமாக கற்பதற்கு அனைவரும் மதசுதந்திரம் வழங்குவதில் முன்நின்று உதவுகிறது. இவ்வகையில் ரொரன்டோ மாநிலத்தில் 5 இந்துக்கோயிலும் மொன்றியலில் 3 கோயில்களும் வங்குவரில் 2 கோயிலும் பிரசித்தமான ஈழத்தமிழரின் கோயில்களாக விளங்குகின்றன.

## கனடா றிச்மன் கில் விநாயகர் கோயில்

இவ்வாலயம் மிகப் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ளது. இராஜகோபுரம் திருமண மண்டபம் என பல்வேறு சிறப்புகள் இவ்வாலயத்தில் அமைந்துள்ளது. கனடாவில் உள்ள பெரிய கோயில் இது சித்திரத்தேர், சகல

வாகனங்களும் காணப்படுகின்றன. தினமும் மதிய பூசையின் முடிவிலும் அன்னதானம் வழங்கப்படுகிறது.

### கனடா மிசசாகா ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோயில்

இவ்வாலயம் பக்தி பூர்வமாக இயங்குகிறது. செவ்வாய் தோறும் பல பக்தர்கள் இவ்வாலயத்தில் பூஜித்து வருகிறார்கள்.

### வங்குவர் லக்சுமி கோயில்

சுமங்கலி பூசை கௌரி விரதம் போன்றவை இங்கு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

### வங்குவர் விநாயகர் கோயில்

விநாயகர் பெருமானின் விழாக்கள் சிறப்பபாக நடைபெற்று வருகிறது.

### ரொன்டோ மார்க்க - ஐயப்பன் கோயில்

இவ்வாலயம் தற்போது பிரமாண்டமான முறையில் கட்டப்பட்டு வருகிறது.

### வரசித்தி விநாயகர் கோயில்

வெள்ளி தோறும் பிரசங்கம், திருவிழா அறநெறிப் பாடசாலை இங்கு சிறப்பாக நடைபெறுகிறது.

### ரொரன்டோ துர்க்கை அம்மன் கோயில்

அபிராமிபட்டர் விழா - மற்றும் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

### ரொரன்டோ முருகன் கோயில்

சூரன்போர், மற்றும் புராணப்படிப்பு இவ்வாலயத்தில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

### மொன்றியல் திருமுருகன் கோயில்

### மொன்றியில் அம்மன் கோயில்

**கனடா இந்து மாமன்றம்**

**இதன் கிளைகள் - சமய வகுப்புகள் நடைபெறும் இடங்கள்**

1. லெமறோ (Lamoureaux) 2. பியர்சன் (Bearson)
3. வெண்ற்கில் (Westhill) 4. சீடா பிளே (Cedarbrae)
5. ரபிற்வூட் (Drift wood) 6. கிப்பிளிங் (Kippling)
7. லான்ஸ்டவுண் (Lansdown)

மேற்குறித்த கிளைகளை நிறுவி மிகச்சிறப்பாக சமயப்பணிகளை ஆற்றிவருகிறது.

**கனடா இந்துப் பேரவை**

ஆத்மஜோதி முத்தையா அவர்களின் கனடா விஜயத்தால் உருவான இச்சபை பல சிறந்த பணிகளை அங்கு அள்ளி வருகிறது. "ஆத்மஜோதி" என்ற மாத இதழ் வெளியிட்டும் முற்றோதல், சமய வகுப்புகள் நடாத்தல் போன்ற பணிகளில் ஆர்வம் காட்டி வருகிறது.

**கனடா சைவ சித்தாந்த மன்றம்**

இம் மன்றம் கடந்த 10 வருடங்களாக மிகவும் சிறப்பாக செயற்பட்டு வருகிறது. திரு.விசுவலிங்கம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இச்சபை சமய வகுப்புகள் நாயன்மார்களது குருபூசை, நாவலர் விழா, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் மாத இதழ் வெளியீடு என பல சிறப்பான பணிகளை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இன் நிறுவனம் சொந்த மண்டபத்தையும் உருவாக்கி செயற்பட்டு வருகிறது.

**கனடா சிவதொண்டன் நிலையம்**

ஞாயிறு தோறும் சிவயோக சுவாமிகள் பெயரில் பஜனை, தியானம், சிறப்புச் சொற்பொழிவு நடாத்தி வருகிறது.

**கனடா சிவத் தொண்டர் சபை**

ஆலயங்களில் சிரமதானம், இந்திய திருக்கோயில் வழிபாட்டு ஒழுங்கு எனப்பல கடமைகள் ஆற்றி வருகிறது.

கனடாவில் சூரன் போர், தேர்த்திருவிழா யாவும் இலட்சம் மக்கள் கூடி சிறப்பாக நடைபெறும்.

கனடாவில் இந்திய மக்களால் உருவாக்கப்பட்ட கோயில்கள் ஆச்சிரமங்கள் பலவுண்டு. மலைப்பிரதேசத்தில் விமானம் திடீரென இறங்கிய இடத்தில் அதனை ஓட்டிய பைலட் ஞானியாக ஆச்சிரமம் அமைத்து இருந்ததும் அவர் ஓடிய விமானம் இன்றும் மலையில் வழிபாடு செய்வதற்கு ஏற்றவகையில் பாதுகாக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. மொன்றியல் மாகாணத்தில் இவ் அற்புத ஆச்சிரமம் அமைந்தள்ளது.

இந்திய இந்துக்கள் உட்பட கனடாவில் சுமார் 4 இலட்சம் இந்துக்கள் வாழ்ந்து வருகிறார்கள். பெரும்பாலான இந்துக்கள் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள ஸ்காப-ரோவில் வாழ்கிறார்கள். சில கோயில்களுக்கு தங்கள் ஊர் ஞாபகார்த்தமாக ஊர்க்கோயில்களின் பெயர்களை வைத்து வணங்கும் மரபைக் காணலாம் உ+ம் நயினை அம்மன், நல்லைக் கந்தன் போன்ற நாமங்கள் சூட்டப்பட்டுள்ளன.

**அவுஸ்ரேலியாவில் இந்துமதம்**

அவுஸ்ரேலியாவில் உள்ள பல மாகாணங்களில் இந்துக்கள் பரவலாக வாழ்கிறார்கள் அங்குள்ள இந்துக்-களால் உருவாக்கப்பட்ட கோயில்களில் சிட்னியில் ஈழத்தமிழர்களால் உருவாக்கப்பட்ட சிட்னி முருகன் கோயில் மிகவும் சிறப்பான உயர் இராஜ கோபுரத்துடன் கூடிய பெருங்கோயிலாக விளங்குகிறது.

**அவுஸ்ரேலியாவில் உள்ள கோவில்கள்**

அடிலெயிட் - விநாயகர் கோயில்
முருகன் கோயில்
சிட்னி - முருகன் கோயில்
வெங்கடேஸ்வரர் கோயில்
மெல்பேர்ண் - சிவன் கோயில்
விஷ்ணு கோயில்
முருகன் கோயில்
துர்க்கை அம்மன் கோயில்

பிரிஸ்பேன் - விநாயகர் கோயில்
பேர்த் - பாலமுருகன் கோயில்
சிவன் கோயில்

மேற்குறித்த கோயில்களைவிட சிட்னி சைவ மன்றம், மெல்பேர்ன் இந்து மன்றம் சிவதொண்டன் நிலையம், "அவுஸ்திரேலியா அபயகரம்" போன்ற ஆன்மீக நிறுவனங்கள் பல்வேறு சமயப் பணிகளையும் பண்பாட்டு வளர்ச்சியில் மிகுந்த அக்கறையும் காட்டி வருகின்றனர். உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட கணக்காளர் மகேசன் என்பவர் ஆத்திசூடி முதல் தேவாரங்கள் பலவற்றை ஆங்கிலம் மூலம் அச்சிட்டு சிறார்களுக்குப் பரப்புவதில் மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்.

## ஜேர்மனியில் இந்துமதம்

ஜேர்மனியில் 56 ஆயிரம் இந்துக்கள் வாழ்கிறார்கள் இங்கு 1994ம் ஆண்டு பெரிய கணேசர் ஆலயம் கட்டப்பட்டது. பல மண்டபங்களில் தற்போது கூட்டு வழிபாடு கோயில் விழாக்கள் நடைபெற்று வருகின்றன.

## பிரான்சில் இந்து சமயம்

பாரிஸ் நகரில் ஆறு இந்துக் கோயில்கள் ஈழத் தமிழர்கள் உருவாக்கப்பட்டுள்ளது. முருகனுக்கு 2 கோயில்களும், பிள்ளையாருக்கு 2 கோயில்களும், அம்மனுக்கு 1 கோயிலும், சிவனுக்கு 1 கோயில் உருவாகியுள்ளது. இங்கும் சைவத் தமிழ் வகுப்புக்கள், இசை நடன வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

## சுவிஸ்லாந்தில் இந்துசமயம்

பேர்ன் - (லங்கனோம்) சித்தி விநாயகர்
பேர்ன் - ஸ்ரீ கல்யான சிவசுப்பிரமணியர்
லவுசான் - கற்பகவிநாயகர்
ஜெனிவா - அற்புத விநாயகர்
பேர்ன் (தூன்)- பிள்ளையார்
பேர்ன் (லீஸ்) - மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி
சொலுத்தூன் - துர்க்கை அம்மன்
ஒல்டன் - மனோன்மணி அம்பாள்
பாசன் - சித்தி விநாயகர்
சிவசுப்பிரமணியர்
இராஜ இராஜேஸ்வரி
சூரிச் (அடெனஸ்வீல்) ஸ்ரீசிவசுப்பிரமணியன்
சூரிச் - அருள்மிகு சிவன் கோயில்

மேற்குறித்த இந்து ஆலயங்களை புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர் உருவாக்கி பேணி வருகின்றனர். சமய வகுப்புகள் நற்சிந்தனைகள், கூட்டு வழிபாடுகள் விழாக்கள் இவ்வாலயங்களில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

**அமெரிக்காவில் இந்து சமயம்**

அமெரிக்காவில் நூற்றுக்கு மேற்பட்ட இந்துக் கோயில்கள் இந்திய மக்களால் உருவாக்கப்பட்டு, மக்கள் தினமும் வழிபட்டு வருகிறார்கள். வட இந்தியர் வாழும் பகுதிகளில் விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் கோயில்கள் உள. அமெரிக்காவில் 70% கோயில்கள் கலிபோர்னியா, நியூயோர்க், இலினொயிஸ், ஒகையோ, டெக்சஸ், லொசேஜ்சஸ் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ளன. டெக்சஸ் என்ற பிரதேசத்தில் இந்தியாவில் இருந்து வந்த பொறியியலாளர்கள், மருத்துவர், வர்த்தகர் கூடுதலாக வசிப்பதால் தம்மன நிம்மதிக்காகவும் பக்தியைத் தம் பிள்ளைகளுக்கு வளர்க்கவும், வரிச்சலுகைக்காகவும் பெரும் செல்வந்தர்கள் கூடி இந்துக் கோயில்கள் பலவற்றைக் கட்டியுள்ளனர். இக்கோயில்களில் பிட்ஸ்பேர்க் நகரத்திற்கு வெளியே நல்ல அமைதியான சுற்றாடலிலுள்ள வெங்க-டேஸ்வர் கோயிலும், ரோச்சஸ்டர், இராஜஇராஜேஸ்வரி கோயிலும் தினமும் மக்கள் கூடும் இடமாக விளங்குகிறது.

அமெரிக்காவில் ஹரே கிருஷ்ணா இயக்கத்தால் தோற்றுவிக்கப்பட்ட பல வழிபாட்டுத் தலங்கள் நிறுவனங்கள் செல்வாக்குடன் காணப்படுகின்றன. அமெரிக்காவில் ஆகம முறையிலும் பல்லவர் கால சிற்ப அமைப்பிலும் அமைந்த கோயிலாக நியூயோர்க்கில் கட்டப்பட்ட மஹாவல்ல கணபதி கோயில் உள்ளது.

அமெரிக்காவில் பல இந்து நிறுவனங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இராமகிருஷ்ணமிசன் பெரிய அளவில் தமது கிளையை நிறுவி செயற்பட்டு வருகிறது.

**நியூசிலாந்தில் இந்து சமயம்**

தற்போது சிறிய இரு இந்துக் கோயில்கள் உருவாகி வளரச்சி பெறுகிறது.

**டென்மார்க்கில் இந்துசமயம்**

இங்கும் சைவ மன்றங்கள் மண்டபங்களில் கோயில் வழிபாடுகளையும் சமய வகுப்புகளையும் நடாத்தி வருகிறார்கள்.

**ஹவாய் - நாட்டில் இந்து சமயம்**

யோகசுவாமிகளின் சீடர் சிவசுப்பிரமணிய சுவாமிகளினால் சிவன் கோயில் ஆச்சிரமம் ஸ்தாபிக்கப்பட்டு உலகப் பிரசித்தி பெற்ற ஆண்மீக நிலையமாக ஆலயமும் ஆச்சிரமமும் இன்று விளங்குகிறது. பிரமச்சாரியர்களாக பல இன சீடர்கள் தங்கி வாழ்கிறார்கள். சந்தண மரம் நிறைந்த காடு இன்று புனித இடமாக உலகை வியக்க வைத்துள்ளது.

**ஹலன் நாட்டில் இந்துசமயம்**

இங்கு ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் கோயில் மிகவும் சிறப்பாக இயங்குகிறது. சைவ சமய வகுப்புகள் பண்பாடு காப்பாற்றல் இவ்வாலய வாயிலாக மிகவும் சிறப்பாக வழிநடத்தப்படுகிறது.

**நிறைவுரை**

உலகளாவிய ரீதியில் இந்து சமயம் இன்று வளர்ச்சி பெற்று வருகிறது. நவீன இன்ரநெற் போன்ற கருவிகளூடாக எமது சமயச் செய்திகள் பல மொழிகளிலும் பரப்பப்படுகிறது. எனினும் மதமாற்றம் சமயத்தின் பெயரால் மேலைநாடுகளில் சண்டைகள், வழக்குகள் நடைபெறுவதும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஆலயங்களை போட்டிக்கு ஆரம்பிப்பவர்களும் பிற நாடுகளில் அதிகரிப்பதைக் காணலாம். எனினும் உலகளாவிய ரீதியில் இந்து மதத்தை ஒருதலைமையில் ஒன்றாக்கும் முயற்சிகள் எதிர் காலத்தில் உருவாக்கப்பட வேண்டும்.

# உடுவிற் கல்விக்கோட்டத்தின் சைவத் திருமுறை விழாக்கள் விபரம்

1. 1997ஆம் ஆண்டு திரு.அ.தற்பரானந்தன் அவர்கள் கோட்டக் கல்விப்பணிப்பாளராக இட மாற்றம் பெற்று வந்து முதன் முதலாக இக்கோட்டத்தில் திருமுறைப்-பண்ணிசைப் போட்டி, நீதிச் செய்யுள் மனனப்போட்டி, தொண்டுபடு செயன் முறைப் போட்டி, கதாப்பிரசங்கப் போட்டி, புராணபடனப் போட்டி ஆகியவற்றைப் பாடசாலை மட்டத்திலும் பின்னர் கோட்ட மட்டத்திலும் நடத்துவித்தார். பன்னிரு திருமுறைகளும் இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து மங்கல வாத்தியங்கள் முழங்கக் குடை, சோடி, ஆலவட்-டத்துடன் வீதி தோறும் பூரணகும்பத்துடன் யா/இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்திற்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன. முதலாவது சைவத் திருமுறைவிழா இணுவில் மத்திய கல்லூரிக் கனிட்ட பிரிவு மேல்மாடி மண்டபத்தில் சிறப்பாகக் கொணடாடப் பெற்றது.

2. 1998 ஆம் ஆண்டு இரண்டாவது சைவத்திருமுறைவிழா இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபத்தில் நடாத்தப் பெற்றது. இணுவில் விசாலாட்சி சமேத விஸ்வநாதசுவாமி தேவஸ்தானத்-திலிருந்து பன்னிரு திருமுறைகளும் மங்கள வாத்திய சகிதம் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு எடுத்துவரப் பெற்றன.

3. 1999ஆம் ஆண்டு மூன்றாவது சைவத்திருமுறை விழா யா/ஏழாலை மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இதற்கு மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலயத்துடன் இணைந்த முருகத்திருத்திலிருந்து பன்னிரு திருமுறைச் சுவடிகளும் ஊர்வலமாகப் பூரண கும்பம் வைத்து மங்கல வாத்தியங்கள் ஒலிக்க எடுத்துவரப்பெற்றன.

4. 2000ஆம் ஆண்டில் யா/கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நான்காவது சைவத் திருமுறை விழா சிறப்பாக நடைபெற்றது. சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்திலிருந்து நீண்ட ஊர்வலமாகப் பன்னிரு திருமுறைகளும் மங்கலவாத்தியங்களுடன் எடுத்துவரப் பெற்றன.

5. 2001 இல் யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்தில் ஐந்தாவது சைவத்திருமுறை விழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. ஏழாலை வடக்கு இலந்தைகட்டி ஞான வைரவர் அலயத்திலிருந்து பன்னிரு திருமுறைகளும் மிக நீண்ட ஊர்வலமாக எடுத்து வரப்பெற்றன.

6. 2002ஆம் ஆண்டு யா/இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் ஆறாவது சைவத்திருமுறை மகாநாடு நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. பன்னிரு திருமுறைகளும் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலிலிருந்து மங்கல வாத்தியங்களுடன் ஊர்வலமாக எடுத்து வரஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## தற்காலிகமாக மூடப்பட்ட நிலையிலுள்ள பாடசாலைகள்

1. யா / புன்னாலைக்கட்டுவன் வடக்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
2. யா/புன்னாலைக்கட்டுவன் வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை
3. யா / ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

06 NOV 20
2124
15 NOV 2019
2124



கங்கை ஓவ்செற் பிறிண்டேர்ஸ் 184A நாவலர் றோட் (பெருமாள் கோவிலடி) யாழ்.